டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

Agridoctor.in | 23.02.2025 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 204 - Madurai | Online Edition

# உழவர் நலத்திட்டத்தின் 19-வது தவணை நாளை பிரதமர் வெளியிடுகிறார்

## 9.8 கோடி விவசாயிகள் பயனடைவார்கள்

புது தில்லி, பிப்.22

பிரதமரின் உழவர் நலத்திட்டத்தின் கீழ் வரவிருக்கும் 19 வது தவணை வெளியீடு குறித்து மத்திய விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான்,

வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசினார். மத்திய அரசு இத்திட்டத்தின் கீழ் தகுதியுள்ள விவசாயி குடும்பத்திற்கு, ஆண்டுக்கு



ரூ.6,000/- வீதம், இதுவரை, ரூ.3.46 லட்சம் கோடி, 11 கோடிக்கும் அதிகமான விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது மோடி அரசின் முதன்மையான முன்னுரிமை விவசாயி களின் நலன் என்று கூறினார். உற்பத்தியை அதிகரிப்பது, உற்பத்திச் செலவைக் குறைப்பது, விளைபொருட்களுக்கு நியாயமான விலையை உறுதி செய்தல், பயிர் இழப்புகளுக்கு இழப்பீடு வழங்குதல், விவசாயத்தைப் பன்முகப்படுத்துதல், 2019-ம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கப்பட்ட இந்த நிதி திட்டம் போன்ற முக்கியத் திட்டங்களின் மூலம் செலவைக் குறைப்பது ஆகியவை இதன் நோக்கமாகும். இந்தத் திட்டம், நாடு முழுவதும் உள்ள விவசாயிகளின் நிதி நல்வாழ்வைத் தொடர்ந்து பலப்படுத்தும். இத்திட்டத்தின் ஆறு ஆண்டுகால வெற்றிகரமான செயல்பாட்டின் அடையாளமாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

இத்திட்டத்தின் 18-வது தவணை வெளியீட்டின் போது, சுமார் 9 கோடியே 60 லட்சம் விவசாயிகளுக்கு தவணை விடுவிக்கப் பட்டதாக சவுகான் கூறினார். விவசாய அமைச்சகம் தவறவிட்ட தகுதியுள்ள விவசாயிகளை சேர்க்க தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது, இந்த முயற்சிகள் மூலம் 19-வது தவணை பெறும் விவசாயிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. 19வது தவணை வெளியீட்டின் மூலம் நாடு முழுவதும் உள்ள 2.41 கோடி பெண் விவசாயிகள் உட்பட 9.8 கோடிக்கும் அதிகமான விவசாயிகள் பயனடைவார்கள். எந்த இடைத் தரகர்களின் தலையீடும் இல்லாமல் நேரடிப் பயன் பரிமாற்றம் மூலம் ரூ 22,000 கோடிக்கு மேல் நேரடி நிதியுதவியைப் பெற்றுள்ளனர். விவசாயிகளின் நலன் மற்றும் விவசாய செழிப்புக்கான அரசின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது.

19-வது தவணையில், சுமார் 76.37 லட்சம் விவசாயிகள் ரூ 1,591 கோடிக்கு மேல் பயனடைவார்கள். நாடு முழுவதும் உள்ள 731 வேளாண் அறிவியல் மையங்களிலும் (கேவிகே) நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படும் என்று மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் கூறினார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பண்ணைத் தொழிலாளர்களுக்கு ஆஸ்துமா நோய் கண்டறிதல் – சிறப்பு முகாம்

கோயம்புத்தூர், பிப்.22

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் ஒரு பகுதியாய் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் மூலம் மாவட்ட காசநோய் ஒழிப்பு மையம், பண்ணைத் தொழிலாளர்களுக்கான காசநோய் பரிசோதனை முகாம் 21.02.25 மத்திய பண்ணையில் நடைபெற்றது. இந்த முகாமை முனைவர் டி.சுரேஷ்குமார், முதன்மையர், முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலகம் மற்றும் முனைவர் எம்.கே. கலாராணி, இயக்குநர், பயிர் மேலாண்மை இயக்ககம் ஆகியோர் துவக்கி வைத்தனர்.







இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பண்ணை தொழிலாளர்களுக்கு இரத்த கொதிப்பு, சர்க்கரை அளவு மற்றும் எக்ஸ்ரே உள்ளிட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. உயர் நிலை சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு பி.என்.புதூர் ஆரம்ப சுகாதார நிலையம் மூலம் அடுத்த கட்ட சிகிச்சை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்வின் மற்றொரு பகுதியாக பண்ணை மகளிருக்காக இலவச மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய் கண்டறியும் முகாம் ஸ்ரீ இராம கிருஷ்ணா மருத்துவமனை மூலம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் மாணவர் நல மைய பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்களால் நடத்தப்பட்டது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.



இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மாசிப்பட்ட எள் பயிரில் அதிக மகசூல் பெற விதைப்பரிசோதனை செய்வீர்!

எள் பயிரானது எண்ணெய் வித்துப் பயிர்களில் மிகவும் முக்கியமான மற்றும் பாரம்பரியமான ஒன்றாகும். எள்ளானது எண்ணெய் வித்துப் பயிர்களின் அரிசி என்றழைக்கப்படுகிறது. இது தொடர் பயிருக்கும், கலப்பு பயிருக்கும் மற்றும் தனிப்பயிருக்கும் ஏற்றதாகும். எள்ளானது நிலத்தடியில் எஞ்சியுள்ள ஈரத்தன்மையை பயன்படுத்தி வறட்சியினைத் தாங்கி வளரக்கூடிய தன்மை உடையதாகும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நெல் அறுவடைக்கு பின் மாசிப் பட்டத்தில் எள் விதைப்பு பணி துவங்கப்பட்டுள்ளது. அதிக மகசூல் பெற தரமான விதைகளைப் பயன்படுத்துவதன் மூலம் குறைந்த விதை அளவு சீரான மற்றும் வேகமான முளைப்புத் திறன், பயிர் எண்ணிக்கை, சீரான முதிர்ச்சி பருவம், குறைவான பூச்சி மற்றும் நோய் தாக்குதல் மற்றும் அதிக விளைச்சல் ஆகிய நன்மைகளை பெறலாம். விவசாயிகள் தங்களது கைவசம் உள்ள எள் விதைகளை விதைக்கும் சூழ்நிலையில் இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதைகளின் தரப்படி விதைகளில் முளைப்புத்திறன் குறைந்தபட்சம் 80சதவீதம், புறத்தூய்மை 97 சதவீதம் மற்றும் அதிகபட்ச ஈரப்பதம் 9 சதவீதத்திற்கு கீழ் உள்ளதா என்பதை அறிந்து விதைப்பு செய்தால் எள் சாகுபடியில் அதிக மகசூல் பெற வாய்ப்புள்ளது.

எனவே, விவசாயிகள் தங்கள் கைவசம் உள்ள எள் விதைகளின் முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிற இரக கலவன் உள்ளதா என்பதை அறிய திருச்சிராப்பள்ளி, புத்தூர் நான்கு ரோட்டில் உள்ள ஒருங்கிணைந்த விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் எள் விதையில் குவியலுக்கு ஒரு விதை மாதிரி விதம் 70 கிராம் என்றளவில் விதை மாதிரி எடுத்து துணிப்பையில் இட்டு முகவரி, இரகம் மற்றும் தேவையான விவரம் குறிப்பிட்ட விவரத்தாள் வைக்கப்பட வேண்டும். மேலும், ஈரப்பதம் அறிய தனியே 100 கிராம் அளவு விதைகளை காற்றுப்புகாத பாலித்தீன் பைகளில் இட்டு பயிர், ரகம் தேவையான ஆய்வு விவரங்களை குறிப்பிட்டு, மாதிரிகளை கொடுத்து ஒரு மாதிரிக்கு ரூ.80/- மட்டும் செலுத்தி விதைகளை பரிசோதனை செய்து கொள்ளலாம். பரிசோதனை முடிவுகளை உங்கள் இருப்பிட முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும் என திருச்சி, விதைப்பரிசோதனை அலுவலர், வே.அறிவழகன் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் ந.சி.அனிதா மற்றும் ரெ.ரமா பிரபா நளினி ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.

# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு மலைப்பயிர்களில் மதிப்புக்கூட்டல் பயிற்சி



தேனி, பிப்.22

தேனி மாவட்டம், சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையம், அறிவியலில் சமநிலை அதிகாரம் அளித்தல் மற்றும் முன்னேற்றப் பிரிவு, அறிவியல் தொழில்நுட்பத் துறை, இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம், சென்னை, தமிழ்நாடு அரசு இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கான அமைப்பு என்ற திட்டத்தின் கீழ் மலைப் பயிர்களான தென்னை, முந்திரி மற்றும் வெற்றிலையில் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் பற்றிய தொழில் முனைவோர் பயிற்சி மூன்று நாட்கள் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தில் நடைபெற்றது.

சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தின் திட்ட ஒருங் கிணைப்பாளர் (பொ) பொ.மகேஸ்வரன் வரவேற்புரையாற்றி வேளாண் அறிவியல் மையத்தின் செயல்பாடுகள் குறிப்பாக ஆதிதிராவிடர்களுக்கான திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தார்.

சென்டெக்ட் நிறுவனத்தின் இணை இயக்குநர் மருத்துவர் ப.சிவராம் தலையுரையாற்றினார். தேனி மாவட்ட தாட்கோ மேலாளர் ஜி.சரளா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தாட்கோவின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கான அரசுத்திட்டங்கள் மற்றும் மானியங்கள் பற்றி விளக்கமளித்தார். தேனி மாவட்ட தொழில் மையத்தின் உதவி இயக்குனர் கே.மோகன்ராஜ் அவர்கள் சிறப்புரையாற்றி மாவட்ட தொழில் மையத்திட்டங்கள் மற்றும் தொழில் தொடங்குவதற்கு தேவையான உத்திகள் பற்றிய விளக்கமளித்தார். சின்னமனூர் வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர் மற்றும் பி.சுரேஸ் கண்ணன்,

உணவு பாதுகாப்பு சான்றிதழ் பெறுவதற்கான முறைகள், முக்கியத்துவங்கள் மற்றும் லேபிளில் கடைப்பிடிக்கப்பட வேண்டியவைகள் பற்றிய சிறப்புரையாற்றினார். மதுரை மாவட்டம், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி உணவு மற்றும் ஊட்டச்சத்து துறைத் தலைவர் பி.வி.கோபி மணிவண்ணன் சிறப்புரையாற்றி உணவுப் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டல் தொழில்நுட்பங்கள் பற்றி விளக்கமளித்தார்.

மதுரை அருள்மிகு மீனாட்சி மகளிர் கலைக் கல்லூரி உள்ள தொழில்முனைவோர் மேம்பாட்டு மையத்தின் ஒருங் கிணைப்பாளர் மற்றும் வணிக மேலாண்மை துறையின் இணை பேராசிரியர் முனைவர் சி.கவிதா சிறப்புரையாற்றினார்.

சின்னமனூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர். எம்.ஜான்சிராணி தோட்டக்கலை சார்ந்த திட்டங்கள் பற்றி விளக்கமளித்தார்.

பயிற்சியின் ஒரு பகுதியாக கண்டுணர்வுக்காக பொள்ளாச்சியில் உள்ள வானவராயர் வேளாண் கல்லூரியுள்ள அமைந்துள்ள வேளாண் தொழில் அபிவிருத்து மையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டது. கல்லூரியின் உணவு மற்றும் ஊட்டச்சத்து துறையின் உதவி பேராசிரியர் முனைவர் எம்.ரம்யா, முருகானந்தன், உற்பத்தியாளர் நிறுவனங்களின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முருகானந்தன் மற்றும் மூத்த ஆராய்ச்சி அலுவலர் ஜி.பி.அபிநயா ஆகியோர்கள் பயிற்சியளித்தனர்.

தேனி மாவட்டம், சுக்காங்கால்பட்டியுள்ள வெற்றிலை பானம் தயார் செய்யும் நிறுவனத்திற்க்கு அழைத்துச் செல்லப்பட்டது. அந்நிறுவனத்தின் உரிமையாளர் சக்திவேல் மற்றும் ரேணுகா ஆகியோர்கள் வெற்றிலையின் மகத்துவம் மற்றும் வெற்றிலை பானம் தயாரித்தல் குறித்த விளக்கமளித்தனர்.

வேளாண் அறிவியல் மையத்தின் மனையியல் தொழில்நுட்ப வல்லுநர் ம.இரம்யாசிவசெல்வி மலைப்பயிர்களில் அறுவடை பின்சார் மேலாண்மை மற்றும் மதிப்புக்கூட்டல் தொழில் நுட்பங்கள் பற்றி பயிற்சியளித்தார்.

இப்பயிற்சியில் தேங்காய், வெற்றிலை மற்றும் முந்திரியில் நவீன தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி செயல்முறை விளக்கத்துடன் வழங்கப்படும்.

மதிப்புக்கூட்டப்பட்ட வெற்றிலை பொருட்களான : வெற்றிலை சாறு, வெற்றிலை பொமேஸ், வெற்றிலை பானம், வெற்றிலை அல்வா மற்றும் வெற்றிலை ஜெல்லி, தேங்காய் பொருட்களான: தேங்காய் பால், தேங்காய் பவுடர், தேங்காய் துருவல், தேங்காய் ஸ்குவாஸ், தேங்காய் ஐஸ்கிரீம், தேங்காய் குலோப்ஜாமுன், தேங்காய் மாவு மற்றும் முந்திரிப் பொருட்களான: முந்திரி பழ ஜீஸ் மற்றும் ஸ்குவாஸ் ஆகியவை பொருட்கள் தயாரித்தல் பற்றிய தொழில்நுட்பங்கள் வழங்கப்பட்டன.

மேலும் மதிப்புக்கூட்டலுக்கு பயன்படும் உணவு பதப்படுத்தும் இயந்திரங்கள் மற்றும் பயன்பாடுகள் பற்றி செயல்முறை விளக்கமளிக்கப்பட்டன.

உணவு தரச்சான்றிதழ்கள் மற்றும் சந்தைப்படுத்துவதற்கான வழிமுறைகள் வழங்கப்படும். தொழில் தொடங்க மற்றும் விரிவுபடுத்துவதற்கு பற்றிய வழிமுறைகள் வழங்கப்பட்டன.




வேளாண் அறிவியல் மையத்தின் தொழில்முனைவோர்கள் எம்.பிரேமா மற்றும் எஸ்.நிறைமதி ஆகியோர்கள் வெற்றிக் கதைகளை பகிர்ந்து கொண்டனர்.

தேனி மாவட்டம் மற்றும் மதுரை மாவட்டத்தை சார்ந்த 25 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள், தொழில் முனைவோர்கள், பெண்கள், ஊரக இளைஞர்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

வேளாண் அறிவியல் மையத்தின் திட்ட அலுவலர் அ.அனு பிரியங்கா நன்றியுரையாற்றினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# கேவிகேயில் நவீன தொழில்நுட்பங்கள், இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பு பற்றிய கருத்துக் கண்காட்சி

திருச்சி, பிப்.22

திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், நவீன தொழில்நுட்பங்கள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, பாரத பிரதமர், 19வது தவணையாக பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதி நாளை திங்கட்கிழமை மாலை 3.00 மணி அளவில் பீகார் மாநிலத்திலிருந்து விடுவிக்கிறார். இதனை ஒட்டி சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மூன்று நாட்களுக்கு திங்கள் முதல் புதன்கிழமை வரை கருத்துக்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த கருத்து காட்சியில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மூலம் வெளியிட்ட நவீன ரகங்கள், தொழில் நுட்பங்கள் மற்றும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கில் இயற்கை வேளாண்மை, இயற்கை இடுபொருட்கள் தயாரித்தல், இயற்கை பொருட்களை சந்தைப்படுத்துதல், பயறு வகை பயிர்களில் மகசூல் அதிகரிக்கும் பயிர் பூஸ்டர்கள் பற்றிய உத்திகள், நெல்லில் மகசூலை அதிகரிக்கும் நெல் ப்லூம், தென்னை யில் குரும்பை உதிர்வை கட்டுப்படுத்தம் தென்னை டானிக், பருத்தியில் மகசூல் அதிகரிக்கும் பருத்தி பிளஸ், கரும்பு பயிரில் மகசூல் கூட்டும் கரும்பு பூஸ்டர், ட்ரான் மூலம் பயன்படுத்தப்படும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்தின் திரவ பயிர் பூஸ்டர்கள், மண்புழு உரம் தயாரித்தல், ஒருங்கிணைந்த பண்ணையம் காளான் வளர்ப்பு, வேளாண்மை, தோட்டக்கலை பொருட்களை மதிப்பு கூட்டுதல் போன்ற தலைப்புகளின் கீழ் கருத்து காட்சிகள் மூன்று நாட்களுக்கு காட்சிப்படுத்தப்பட உள்ளன.

இந்த நிகழ்ச்சியின் தொடக்க விழாவானது திங்கட்கிழமை காலை 11. 30 மணி முதல் நடைபெற உள்ளது. மேலும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு தொழில்நுட்ப வல்லுநர்களால் விளக்கம் அளிக்கப்பட உள்ளது.

எனவே விவசாயிகள் திங்கள்கிழமை காலை 11.30 மணி அளவில் வருகை புரிந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் விவரங்களுக்கு 0431 2962854, 91717 17832 என்ற எண்ணை அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொள்ளவும்.

# பாலாறு வேளாண்மைக் கல்லூரி ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் துவக்கவிழா



திருப்பத்தூர், பிப்.22

பாலாறு வேளாண்மைக் கல்லூரியில் பயிலும் வேளாண் பட்டப்படிப்பு இறுதியாண்டு மாணவர்களின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் துவக்கவிழா, திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள A.K.மோட்டூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் மோட்டூர் ஊராட்சி மன்ற தலைவர் P.வேலு தலைமைத் தாங்கினார். சிறப்பு விருந்தினராக திருப்பத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் J.C.ராகினி கலந்துக் கொண்டு விழாவைச் சிறப்பித்தார்.

மேலும் விவசாயிகளுக்கு அக்ரிஸ்டாக் என்னும் விவசாயிகள் தனித்துவ அடையாள எண் மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகள் பற்றி விளக்கினார். பின்னராகப் பேசிய பாலாறு வேளாண் கல்லூரியின் முதல்வர் முனைவர் N.தமிழ்செல்வன் விவசாயத்தின் மகத்துவம் பற்றியும், விவசாயத்தில் புதுப்புது தொழில்நுட்பங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். அதன்பின் பேசிய வேளாண் விரிவாக்கத் துறை உதவிப் பேராசிரியை முனைவர் A.வெண்ணிலா மேரி, ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தைப் பற்றியும் அதன் பயன்கள் குறித்தும் விளக்கினார்.

மேலும் பாலாறு வேளாண் கல்லூரியின் உதவிப் பேராசிரியர்கள் முனைவர் A.மகாதேவன் (தோட்டக்கலைத் துறை), முனைவர் கு.விக்னேஷ் (தாவர நோயியல் துறை) மற்றும் முனைவர் மூ.வானதி (உழவியல் துறை) கலந்துக் கொண்டு விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தனர்.

இந்நிகழ்ச்சியை திருப்பத்தூர் மற்றும் கந்திலி வட்டாரத்தில் தங்கி பயிற்சி பெறும் மாணவ, மாணவிகள் ஏற்பாடு செய்திருந்தனர். இவ்விழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வாழைத்தார்களை, வாழை மரத்திலிருந்து அறுவடை வரை எப்படி பாதுகாப்பது? தெரியுமா?



வாழையில் வாழைத்தார்கள் உருவான நிலையிலிருந்து முதிர்ந்த அறுவடை நிலை வரை பாதுகாப்பாக கடினமான பணியாகும். மழை, வெயில், பனி, காற்று போன்றவற்றிலிருந்தும் பூச்சி / பூஞ்சானங்களிலிருந்து பாதுகாப்பது குறித்தும் நல்ல தரமான பளபளப்பான வாழைக்காய் பழங்களை எப்படி பெறுவது குறித்து, தேசிய வாழை ஆராய்ச்சி மையம் (ICAR - NRCB) வெளியிட்ட வழிகாட்டு நெறிமுறைகள் பற்றி பார்ப்போம்.

**ஏற்றுமதிக்கு உகந்த வாழைப் பழங்கள்**

பொதுவாக வெளிநாடுகளுக்கு தரமான நன்றாக விளைந்த பூச்சி / நோய் தாக்காத வாழை பழங்களில் எவ்விதமான கரும்புள்ளிகள் சிராப்புகள் இல்லாத பழத்திற்கு நல்ல கிராக்கி அந்த வகையில் அதிக அளவாக ஏற்றுமதியாகும் வாழை களில் (G9) என்ற கிராண்ட் நைன், நேந்திரன், செவ்வாழை, நெய் பூவன், பூவன், ரஸ்தாலி போன்ற வாழைகளில் தார் விடும் போது அதனை சுற்றி உறையிட்டு பாதுகாத்தால் காய்களின் எண்ணிக்கை கூடுவதுடன் வாழைத்தாரின் எடையும் அதிகரிக்கும். வாழைத்தார்கள் எவ்வித மரு மச்சம் கரும் புள்ளிகள் இன்றி பளபளப்பாக இருப்பதால் சந்தையில் கூடுதல் விலை கிடைப்பதுடன் விற்பனையும் விரைவாக நடைபெறும்.

**வாழைத்தார்கள் என்னென்ன முறைகளில் (COVER) பண்ணலாம்**

1) பாரம்பரிய முறையில் சருகு கொண்டு உறையிடுதல்

2) தென்னை ஓலைகளை கொண்டு உறையிடுதல்

3) பிளாஷ்டிக் பை (சாக்கு) (உரசாக்கு) கொண்டு உறையிடுதல்

4) நவீன முறையில் பாலி புரோபோலின் பேக் (POLY PROPOLIN BAG) உறையிடுதல்

போன்ற முறைகளில் அந்த அந்த பகுதிகளுக்கேற்றவாறு விவசாயிகள் வாழைத்தாரின் மீது உறையிடுகின்றனர்.

**வாழை சருகு கொண்டு உறையிடல்**

இந்த முறையில் காய்ந்துபோன வாழை இலைகளின் சருகு களை சேகரித்து உறை கட்டுதல். இந்த முறையானது பாரம் பரியமாக தொன்றுதொட்டு விவசாயிகளால் பின்பற்றபடுகிறது.




**1) எப்போது உறையிடுவது?**

வாழையின் அனைத்து சீப்புகளும் விரிந்த ஒரு வாரத்திற்கு பிறகு காய்ந்துபோன வாழைபட்டையின் சருகுகளை கொண்டு வாழைத்தாரின் கொன்னை முதல் வாழைதாரிடையே சுற்றி கவர் (COVER) பண்ணுவதால் சூரிய வெப்பத்திலிருந்து காய் களை காப்பதுடன் காய்கள் கரும்புள்ளி இன்றி பளபளப்பாக இருக்கும். வாழை மரத்தின் கடைசில வரும் கண்ணாடி இலையை கொன்னையில் வைத்து கட்டி விடுவதால் கொன்னை அழுகல் நோய் தாக்கப்பட வாய்ப்பு உள்ளது. இம்முறை கன்னியாகுமரி, நாகர்கோவில், திருநெல்வேலியின் சில பகுதியில் பின்பற்றப்படுகிறது. ஏகப்பட்ட நன்மைகள் இந்த சருகு கட்டுவதால் ஏற்பட்டாலும் மழை மற்றும் பனி காலங் களில் சருகுகளை பூஞ்சானங்கள் தாக்கி வாழைத்தாரையும் பாதிக்கும் என எச்சரிக்கை செய்கின்றனர்.

**2) தென்னை ஓலைகளை கொண்டு உறையிடுதல்**

இம்முறை மட்டி வாழை மற்றும் பூவில்லா சுண்டன் ரக வாழைக்கு கன்னியாகுமரி மாவட்ட பகுதியில் உறையிடு கின்றனர். இந்த முறையில் காய்களுக்கு பாதுகாப்பு கிடைத் தாலும் காய்களின் எதாவது பூச்சி / நோய் தாக்கப்பட்டால் பயிர்பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளுவது கடினமாகும்.

### 3) பிளாஷ்டிக் சாக்கு கொண்டு உறையிடுதல்

காலியான உரச்சாக்கு மற்றும் சீனி சாக்கு போன்ற பாலித்தின் சாக்குகளை கொண்டு வாழைத்தார்களை சுற்றி உறையிடுவது கேரள மாநிலத்தில் நடைமுறையில் உள்ளது.

### 4) பாலி புரோபோலின்

இந்த நவீன முறையை பல இடங்களில் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படுகின்ற வாழைத் தோட்டங்களில் உள்ள தார்களுக்கு பின்பற்றப்படுகிறது. இந்த பாலி புரோபோலின் பைகள் 179 GM தடிமன் கொண்ட வெள்ளை மற்றும் நீல நிற பைகள் உறையிடப்படுகிறது. அதிக வெப்பமும் அதிக குளிர்ச்சியும் வாழைத்தார் தங்கி பாதுகாப்பாக இருக்க இந்த பைகள் உதவுகின்றன.




மேலும் இதனை கொண்டு உறையிடுவதால் அங்கு (MICRO CLIMATE) சூழ்நிலை உருவாகுவதால் காய்களின் எடையும் எண்ணிக்கையும் அதிகரிக்க பதுடன் மரு கரும்புள்ளிகள் போன்றவைகளை ஏற்படாது மற்றும் சீப்புகளில் சீராப்புகள் ஏற்படாது.

எனவே சந்தைகளில் அதுவும் அப்டா மார்க்கெட் போன்ற பெரிய பெரிய சந்தைகளில் நல்ல விலை வாழைத்தார்களுக்கு கிடைப்பதுடன் வாங்கும் வாடிக்கையாளர்கள் எவ்வித தயக்க மின்றி ஆசையுடன் வாங்கி செல்லுவார்கள்.

என்ன இனிமேலாவது வாழைத்தார்களை பொத்தி கவர் போட்டு பாருங்க. வியாபாரிகள் வீடு தேடி வருவாங்க,வாங்கிட,

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits.
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# காளான் வளர்ப்பு மற்றும் மதிப்பு கூட்டல் பயிற்சி

தேனி, பிப்.22

ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சி கல்லூரி, விலங்கியல் துறை, அறிவியலில் சமநிலை அதிகாரம் அளித்தல் மற்றும் முன்னேற்ற பிரிவு, மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை, இந்திய அரசு, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம், தமிழ்நாடு அரசு, பட்டியல் இன மற்றும் பழங்குடி இன மக்களுக்கான அமைப்பு என்னும் திட்டத்தின் கீழ் இணைந்து நடத்திய "காளான் வளர்ப்பு மற்றும் மதிப்பு கூட்டல் பயிற்சி" 18.02.25 முதல் 20.02.25 வரை மூன்று நாட்கள் நடைபெற்றது.




18.02.25 அன்று துவக்க விழாவில் முனைவர் சு.கேத்தரின் பி.அலெக்சாண்டர், விலங்கியல் துறை தலைவர், இணை பேராசிரியர் வரவேற்புரை வழங்கினார். அருட்சகோதரி. முனைவர் சாந்தா மேரி ஜோஷிற்றா கல்லூரி செயலர் தலைமை உரை ஆற்றினார்கள். வசந்தம் செல்வம், தலைமை நிர்வாக அதிகாரி, தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் பெரிய குளம், வேளாண் வணிக காப்பீட்டு மற்றும் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், பெரியகுளம் தொழில் முனைவோரை ஊக்குவித்து, வாய்ப்புகளை பயன்படுத்த வலியுறுத்தி தொடக்க உரை வழங்கினார்கள். முனைவர் வி.ஜெமிமா பிளாரன்ஸ் போர்ஜியா இணை பேராசிரியர் நன்றி உரையாற்றினார். அதன் பின் அருட்சகோதரி முனைவர் ச.இருதய கலைச்செல்வம், உதவி முதல்வர், உதவி பேராசிரியர் காளான் வளர்ப்பு பற்றிய அறிமுக உரை நிகழ்த்தினார். முனைவர் வி.ஜெமிமா பிளாரன்ஸ் போர்ஜியா, இணை

பேராசிரியர் காளான் படுக்கை தயாரிப்பது பற்றி செயல்முறை விளக்கம் அளித்தார். 19.02.25 அன்று பங்கேற்பாளர்கள் சென்டெக்ட் வேளாண் தொழில்நுட்ப மையம், காமாட்சிபுரம் கண்டுணர்வு முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு காளான் மதிப்பு கூட்டல் பற்றிய செயல்முறை பயிற்சியை பெற்றார்கள். 20.02.25 அன்று விலங்கியல் துறை ஜெயராஜ் அன்ன பாக்கியம் கல்லூரியில் காளான் மதிப்பு கூட்டல் பற்றிய செயல் முறை பயிற்சியை பெ.ஷெரின் ரெபேக்கா, உதவி பேராசிரியர் வழங்கினார். மேலும் பயிற்சி கையேடும் வழங்கப்பட்டது. அதன் பின் நிறைவு விழாவில் முனைவர் சு.கேத்தரின் பி.அலெக் சாண்டர் வரவேற்புரை வழங்கினார். சரளா, மாவட்ட மேலாளர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம், தேனி மாவட்டம் பட்டியல் இன மற்றும் பழங்குடி இன மக்களுக்கான அரசின் நலத்திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து தலைமை உரை ஆற்றினார்.

பங்கேற்பாளர்களுக்கு பங்கேற்பு சான்றிதழ்கள் வழங்கப் பட்டது. பெ.ஷெரின் ரெபேக்கா, துணை பேராசிரியர் நன்றி நவில காளான் வளர்ப்பு மற்றும் மதிப்பு கூட்டல் பயிற்சி நிறைவு பெற்றது. இப்பயிற்சியில் 27 பட்டியல் இன மற்றும் பழங்குடி இன மக்கள் பங்கேற்று பயனடைந்தார்கள்.

# நெல் அறுவடையின் போது ஆர்வத்துடன் பங்கேற்ற வேளாண் கல்லூரி மாணவர்கள்

இராமநாதபுரம், பிப்.22

இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலம் அருகே உள்ள கிராமங்களில் நெல் அறுவடையின் போது நம்மாழ்வார் வேளாண் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் மாணவர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர், இதில் விவசாயிகள் தங்கள் சந்தேகங்களை மாணவர்களிடம் கேட்டு அறிந்து கொண்டனர் மற்றும் மாணவர்களும் விவசாயி களிடமிருந்து அவர்களின் விதை விதைப்பு முறைகள் பற்றியும் நெல் விளைச்சல் பற்றியும் அறிந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# பயறுவகை பயிர்களில் இலைவழித் தெளிப்பு முறை : பயிர் விளைச்சலை மேம்படுத்துதல் மற்றும் உற்பத்தியை ஊக்குவித்தல்

பயறு, கொண்டைக்கடலை, பீன்ஸ் மற்றும் பட்டாணி உள்ளிட்ட பருப்பு வகைகள் நிலையான விவசாயத்தில் முக்கிய பங்கு வகிக்கும் அத்தியாவசிய பயிர்கள். அவை புரதம், நார்ச்சத்து மற்றும் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் நிறைந்தவை, அவை மனித மற்றும் கால்நடை உணவின் முக்கிய அங்கமாக அமைகின்றன. கூடுதலாக, பருப்பு வகைகள் நைட்ரஜன் நிர்ணயம் மூலம் மண்ணின் ஆரோக்கியத்திற்கு பங்களிக்கின்றன, இது மண் வளத்தை அதிகரிக்கிறது மற்றும் செயற்கை உரங்களின் தேவையை குறைக்கிறது. இருப்பினும், பல்வேறு உயிரியல் மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளால் பயறுவகை பயிர்களில் இருந்து உகந்த மகசூல் மற்றும் தரத்தை அடைவது சவாலானது. பயிர் விளைச்சலை மேம்படுத்தும் திறனுக்காக கவனத்தை ஈர்த்த ஒரு திறமையான வேளாண்மை நடைமுறையானது இலைவழிப் பயன்பாடு ஆகும்.

## இலைவழித் தெளிப்பு முறை என்றால் என்ன?

இலைவழித் தெளிப்பு முறை பயன்பாடுகள் தாவரங்களின் இலைகளில் ஊட்டச்சத்துக்கள், உரங்கள் அல்லது உயிர் ஊக்கிகளை நேரடியாக தெளிப்பதை உள்ளடக்கியது. இந்த முறை அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களை விரைவாக உறிஞ்சுவதற்கு அனுமதிக்கிறது மற்றும் தாவரங்களில் விரைவான உயிர் வினைகளை எளிதாக்குகிறது. பயறு வகை பயிர்களுக்கு இலைவழி ஊட்டச்சத்து மிகவும் பயனுள்ளதாக இருக்கும், ஏனெனில் இது ஊட்டச்சத்து குறைபாடுகளை சமாளிக்க உதவுகிறது மற்றும் சுற்றுச்சூழல் அழுத்தங்களுடன் தொடர்புடைய பிற அழுத்தத்தை குறைக்க உதவுகிறது.

## நன்மைகள்

**ஊட்டச்சத்து திறன் மேம்பாடு :** நுண்ணூட்டச் சத்துக்கள் (துத்தநாகம், இரும்பு, மாங்கனீசு) மற்றும் பேரூட்டச்சத்துக்கள் (நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம்) போன்ற அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களை பருப்பு பயிர்கள் நேரடியாக தேவைப்படும் இடங்களில் பெறுவதை உறுதிசெய்யும் வகையில், இலைவழித் தெளிப்பு இலக்குகுரியச்சத்துகளை அனுமதிக்கிறது. இது மேம்பட்ட ஊட்டச்சத்து நிலை மற்றும் அதிக மகசூலுக்கு வழிவகுக்கும்.

**மேம்படுத்தப்பட்ட ஒளிச்சேர்க்கை :** இலைவழித் தெளிப்பு மூலம் முக்கிய ஊட்டச்சத்துக்களை வழங்குவதன் மூலம், பயிர்கள் அவற்றின் ஒளிச்சேர்க்கை திறனை அதிகரிக்க முடியும். மேம் படுத்தப்பட்ட ஒளிச்சேர்க்கையானது சிறந்த வளர்ச்சி மற்றும் உற்பத்தித் திறனாக மாறுகிறது. குறிப்பாக ஊட்டச்சத்து பயறு வகைகளில் உட்கிரகிக்கும் திறனுக்காக நேரடி தெளிப்பு முறை வளர்ச்சி மற்றும் மகசூலை அதிகரிக்கிறது.

**சுற்றுச்சூழல் அழுத்தத்தங்களை குறைத்தல் :** பயறு வகைகள் வறட்சி, உப்புத்தன்மை, பூச்சி மற்றும் நோய்த்தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு அழுத்தங்களுக்கு ஆளாகின்றன. இலைவழித்தெளிப்பு தாவரத்தின் மீள்தன்மையை அதிகரிப்பதன் மூலம் இந்த அழுத்தங் களைத் தணிக்க முடியும். உதாரணமாக, சில உயிர் ஊக்கிகளின் பயன்பாடுகள் பயிர்களில் நீர் இருப்பை மேம்படுத்தலாம் மற்றும் ஆவியாதல் விகிதங்களைக் குறைக்கலாம், உலர் நிலைமைகளை சமாளிக்க தாவரங்களுக்கவும் மேலும் வறட்சியை தாங்கி வளரவும் உதவுகின்றது.

**மேம்படுத்தப்பட்ட தரம் :** ஊட்டச்சத்தை அதிகரிப்பதன் மூலமும், சுவையை அதிகரிப்பதன் மூலமும், ஊட்டச்சத்துக்கு எதிரான காரணிகளின் அளவைக் குறைப்பதன் மூலமும், இலைவழி உணவு பயிரின் தரத்தை மேம்படுத்தலாம். மனித நுகர்வுக்கான பருப்பு வகைகளுக்கு இது மிகவும் முக்கியமானது, ஏனெனில் நுகர்வோர் உயர்தர, சத்தான உணவுப் பொருட்களை அதிகளவில் கோருகின்றனர்.

**இரசாயன பயன்பாட்டை குறைத்தல் :** தாவரங்களுக்கு நேரடியாக ஊட்டச்சத்துக்களை வழங்குவதன் மூலம், இலைகளின் பயன் பாடுகள் செயற்கை உரங்களை நம்பியிருப்பதை குறைக்கலாம். இந்த நடைமுறையானது சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதன் மூலமும் ஆரோக்கியமான சுற்றுச்சூழல் அமைப்பை ஊக்கு விப்பதன் மூலமும் நிலையான விவசாயக் கொள்கைகளுடன் ஒத்துப்போகிறது.

**இலைவழித் தெளிப்பு முறையில் கவனிக்க வேண்டியவை**

**நுண்ணூட்டச் சத்துக்கள் :** போரான், மாலிப்டினம் மற்றும் துத்தநாகம் போன்ற நுண்ணூட்டச் சத்துக்கள் ஆரோக்கியமான பருப்பு பயிர் வளர்ச்சிக்கு முக்கியமானவை. இந்த சத்துக்களை இலைவழியாகப் பயன்படுத்துவதால், விளைச்சல் குறைவதற்கு வழிவகுக்கும் குறைபாடுகளைத் தடுக்கலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**பேரூட்டச்சத்துக்கள் (நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம்) :** பருப்பு வகைகள் இயற்கையாகவே நைட்ரஜனை சரிசெய்தாலும், முக்கியமான வளர்ச்சி நிலைகளில் துணை இலை நைட்ரஜன் விளைச்சலை அதிகரிக்கலாம், குறிப்பாக சுற்றுச்சூழல் அழுத்தமான சூழநிலைகளை தாங்க உதவுகின்றன.

**உயிர் ஊக்கிகள் :** கடற்பாசி சாறுகள் அல்லது ஹ்யூமிக் அமிலங்கள் போன்ற இயற்கையான பொருட்களைக் கொண்ட தயாரிப்புகள் தாவர வளர்ச்சியைத் தூண்டும் மற்றும் சுற்றுச்சூழல் சகிப்புத்தன்மையை மேம்படுத்தும்.

**இலைவழித்தெளிப்பிற்கான சிறந்த நடைமுறைகள்**

**நேரம் :** இலைவழித்தெளிப்பு பயன்பாடுகளின் செயல்திறனுக்கு நேரம் முக்கியமானது. வெப்பநிலை குளிர்ச்சியாக இருக்கும் போது அதிகாலை அல்லது பிற்பகல் வேளையில் தெளிப்பது உறிஞ்சு தலை மேம்படுத்தி ஆவியாவதைக் குறைக்கும்.

**நீர்த்தல் :** இலை கருகுவதைத்தடுக்க ஊட்டச்சத்து கரைசல்களை முறையாக நீர்த்துப்போகச் செய்வது அவசியம். நீர்த்த விகிதங் களுக்கான உற்பத்தியாளர் பரிந்துரைகளைப் பின்பற்றுவது வெற்றிகரமான பயன்பாட்டிற்கு முக்கியமாகும்.

**வானிலை நிலைமைகள் :** எதிர்பார்க்கப்படும் மழைக்கு முன் இலைவழி சிகிச்சையைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும், ஏனெனில் அதிக மழைப்பொழிவு ஊட்டச்சத்துக்களை உறிஞ்சு வதற்கு முன்பே வடியச் செய்து விடும்.

**பொருந்தும் தன்மை :** எதிர்மறையான தொடர்புகளைத் தவிர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மற்ற பூச்சிக்கொல்லிகள் அல்லது உரங்களுடன் இலை தயாரிப்புகள் இணக்கமாக இருப்பதை உறுதி செய்யவும்.

**எதிர்கால முன்னோக்குகள் :** பயறுவகை பயிர்களின் மகசூல் மற்றும் நிலைத்தன்மையை அதிகரிக்க இலைவழி பயன்பாடுகள் குறிப்பிடத்தக்க வாய்ப்பை வழங்குகின்றன. ஊட்டச் சத்து வழங்குதல் மற்றும் தாவர மீள்திறனை மேம்படுத்துவதன் மூலம், இரசாயன உள்ளீடுகளை நம்பியிருப்பதைக் குறைத்து விவசாயிகள் சிறந்த அறுவடைகளைப் பெற முடியும். வளர்ந்து வரும் விவசாய சவால்களை எதிர்கொள்வதில், இலைவழித்தெளிப்பு பயன்பாடு களின் பயன்பாட்டை ஊக்குவிப்பது பயறு உற்பத்தி முறைகளில் பின்னடைவை நிறுவுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இறுதியில் உணவு பாதுகாப்பு மற்றும் நிலையான விவசாய நடைமுறை களுக்கு பங்களிக்கிறது. ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பம் தொடர்ந்து



முன்னேறி வருவதால், இலைவழித் தெளிப்பு பயன்பாடுகளின் சாத்திய மான நன்மைகள் விரிவடையும், பயறு வகை பயிர்களுக்கு மிகவும் பயனுள்ள மற்றும் நிலையான மானாவாரி பயறு வகை சாகுபடி விவசாய முறைகளுக்கு வழி வகுக்கும்.

மேலும் விபரங்களுக்கு **ம.ஜெயராணி, துணை பேராசிரியர் (உழவியல் துறை), பெ.முரளி சங்கர், உதவி பேராசிரியர் (பயிர் நோயியல் துறை), புஷ்கரம் வேளாண் மற்றும் அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை, க.கலைச்செல்வி, உதவி பேராசிரியர் (உழவியல் துறை), வேளாண் அறிவியல் நிலையம், விருத்தாச்சலம், ப.அருண் குமார், உதவி பேராசிரியர் (வேளாண் காலநிலை மற்றும் ஆராய்ச்சி துறை), நாளந்தா வேளாண்மை கல்லூரி, திருச்சி, வி.சங்கீதா, தொழில்நுட்ப வல்லுனர், (தோட்டக்கலை), வேளாண் அறிவியல் நிலையம், பெரம்பலூர்.**

# மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

## வேளாண் கல்லூரி மாணவிகள் விவசாயிகளுடன் சந்திப்பு



இராமநாதபுரம், பிப்.22

இராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் உள்ள கோரைப்பள்ளம் கிராமத்தில் நம்மாழ்வார் வேளாண் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் மாணவிகள் ஊரக வேளாண் அனுபவ பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். அதன் கீழ் மாணவிகள் கோரைப்பள்ளம் கிராமத்தில் உள்ள விவசாயிகளை சந்தித்து வேளாண்மை பற்றிய தகவல்களை கேட்டு அறிந்தனர். மேலும் விவசாயிகளிடம் வேளாண் மேலாண்மை, வேளாண்மையில் அவர்கள் பயன்படுத்தும் தொழில்நுட்பங்கள், இயற்கை வேளாண்மை முறைகள் மற்றும் உள்நாட்டு தொழில்நுட்ப அறிவு போன்ற தகவல்களை கேட்டு அறிந்து கொண்டனர். இதில் கோரைப்பள்ளம் கிராம விவசாயிகள் முழுமையான ஒத்துழைப்பு அளித்தனர்.

# அட்மா திட்டத்தில் காளான் வளர்ப்பு குறித்த பயிற்சி

அரியலூர், பிப்.22

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின்கீழ் சோழமாதேவி கிரீடு வேளாண்மை அறிவியல் மையத்தில் காளான் வளர்ப்பில் கடைபிடிக்க வேண்டிய சுகாதார நடவடிக்கைகள் குறித்து விவசாயி களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் ரவி தலைமையேற்று தொழில்நுட்ப உரை ஆற்றி பேசுகையில் காளான் வளர்ப்பானது விவசாயத்தோடு இணைந்த இலாபகரமான, கிராம மகளிர் மற்றும் வேலையில்லா பட்டதாரி களுக்கு ஏற்ற உபரி வருமானம் தரக்கூடிய ஒரு சுயதொழில் எனக் கூறினார். மேலும் புரதம் மற்றும் பல்வேறு மருத்துவக்குணங்களை கொண்ட காளான்களை உட்கொள்ளுவதால் ஆரோக்கிய நன்மைகள் ஏற்படும் எனவும், வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு காளான் வளர்ப்பு உறுதுணையாக இருக்கும் என விரிவாக எடுத்துக் கூறினார். கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் அசோக்குமார் பேசுகையில் காளான் வளர்ப்பிற்கு சிறிய இடம் போதுமானது எனவும், பண்ணையில் கிடைக்கும் சோளம் மற்றும் வைக்கோல் ஆகியவைகளை முறையே காளான் விதை மற்றும் காளான் உற்பத்திக்கு பயன்படுத்தலாம் எனக் கூறினார். மேலும் காளான் உற்பத்தி மற்றும் அவற்றில் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார நடவடிக்கைகள் குறித்து செயல்விளக்க மாகவும், படக்காட்சிகள் மூலமாகவும் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். காளான் எடுத்த பின்பு உள்ள எஞ்சிய பொருட்களை இயற்கை உரமாக மாற்றி உபயோகிக்கலாம் என விரிவாக எடுத்துக் கூறினார். வேளாண்மை அலுவலர் தமிழ்மணி விவசாயிகள் அனைவரும் தங்களுடைய நில உடைமை பதிவேடுகளை வேளாண் துறை மற்றும் சகோதரத்துறையின் மூலம் நடைப்பெற்று வரும் முகாம்களில் கலந்துக் கொண்டு தங்களது நிலவிவரங்களை பதிந்து இனிவரும் காலங்களில் அரசின் நலத்திட்டங்களை பெற்றிட விவசாய பதிவு முக்கியம் எனக் கூறினார். கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் ராஜ்கலா மையத் தின் செயல்பாடுகள் குறித்து எடுத்துக் கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சகாதேவன், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் லெட்சுமி, உசா ஆகியோர் செய்திருந்தனர். பயிற்சியில் சோழமாதேவி கிராமத்தை சேர்ந்த 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக்கொண்டனர்.

# வாழ்விற்கு வளம் சேர்க்கும் வரகு



வரகு (Paspalum Scrobiculatum) ஒரு சிறுதானிய பயிராகும். இது அதிக வறட்சி சகிப்புத் தன்மை மற்றும் அதிக ஊட்டச்சத்து கொண்டதாக உள்ளது. மூலதேசம், ஆப்பிரிக்கா குறிப்பாக இந்தியா, நேபாளம் மற்றும் ஆப்பிரிக்காவில் முக்கியமாக பயிரிடப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் திருமங்கலம், செல்லம்பட்டி, டி.கல்லுப்பட்டி மற்றும் சேடபட்டி வட்டாரங்களில் பரவலாக பயிரிடப்படுகிறது. மானாவாரி நிலங் களில் குறைந்த வருவாயில் வளர்த்துக் கொள்ளலாம்.

**சுகாதார நன்மைகள்**

- **நார்ச்சத்து அதிகம் :** செரிமானத்தை மேம்படுத்தும், உடல்கட்டை கட்டுப்படுத்த உதவும்.
- **குளூட்டன் இல்லாத உணவு :** குளூட்டன் ஒவ்வாமை உள்ளவர்களுக்கு ஏற்றது.
- **குறைந்த கிளை சமிக்குறியீடு :** சர்க்கரை நோயாளிகளுக்கு பயனுள்ளதாக உள்ளது.
- **ஆக்ஸிடேற்ற அழுத்தத்தை குறைக்கும் :** உடலுக்குள் எதிர்பொருள்களை அதிகரிக்க உதவும்.

**ஊட்டச்சத்து மதிப்பு (100 கிராம்)**

- கார்போஹைட்ரேட் - 65-70 %
- புரதச்சத்து - 8-12 %
- கொழுப்பு - 2-4%
- நார்ச்சத்து - 5-6%
- கால்சியம் - 27-35 மி.கி.
- இரும்புச்சத்து - 1.5-2 மி.கி.
- பாஸ்பரஸ் - 188-240 மி.கி.

**சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார முக்கியத்துவம்**

- குறைந்த செலவில் பயிரிடலாம். சிறு விவசாயிகளுக்கு ஏற்றது.
- நிலத்தின் மண்தரத்தை மேம்படுத்தும் மற்றும் சுற்றுச்சூழல் வேளாண்மையில் பங்காற்றும்.

● பூச்சிக் கொல்லிகள் அதிகம் தேவையில்லை. இயற்கையான முறையில் வளர்க்கலாம்.

**1. காலநிலை மற்றும் மண் தேர்வு**

● **காலநிலை** : 25°C - 32°C வெப்பநிலையில் சிறப்பாக வளர்கிறது.

● **மழை** : வருடத்திற்கு 500-900 மி.மீ வரை மழைப்பொழிவு மிகவும் நல்லது.

● **மண்** : செம்மண், மணல் கலந்த களிமண் போன்றவற்றில் நன்றாக வளர்கிறது. அமில காரநிலை (PH) 5.5 - 7.5 இருக்க வேண்டும்.

**2. நிலம் தயாரிப்பு**

நிலத்தை 2-3 முறை ஆழமாக நன்றாக உழவு செய்ய வேண்டும். கடைசி உழவின் போது 5-10 டன் தொழுஉரம் இடவேண்டும். அதிக ஈரப்பதம் உள்ள இடங்களில் நீர் நிலையைக் கட்டுப்படுத்த வேண்டும்.

**3. விதைதேர்வு மற்றும் விதைப்பு**

● **விதைஅளவு**
- நேரடி விதைப்பு - 8-10 கிலோ / ஹெக்டேர்
- வரிசை விதைப்பு - 5-6கிலோ / ஹெக்டேர்

● **பருவம்**
- மானாவாரி - ஜூன் - ஜூலை (காரிப் பருவம்)
- இறவை - செப்டம்பர் - அக்டோபர் (ரபி பருவம்)

● **இரகங்கள்**
- Co-3, TNAU-86

● **இடைவெளி**
- வரிசைக்கு வரிசை - 25-30 செ.மீ
- செடிக்கிடையே - 8-10 செ.மீ

**4. உரம் மேலாண்மை**

● **அடிப்படை உரம்**
- நைட்ரஜன் (N) - 44 கிலோ / ஹெக்டேர்
- பாஸ்பரஸ் (P) -22 கிலோ / ஹெக்டேர்

● மேல் உரம் - நைட்ரஜன் (N) - 50 % - பயிர் வளர்ச்சிப் பருவத்தில் கொடுக்க வேண்டும்.

● செயற்கை உரம் இல்லாமல் பயிரிட விரும்பினால் பசுந்தாழ் உரங்கள் (Green Manure) மற்றும் ஆர்கானிக் உரங்கள் / மண்புழு உரத்தை பயன்படுத்தலாம்.

**5. நீர் மேலாண்மை**

- பொதுவாக மானாவாரி பயிராக வளர்க்கப்படுகிறது.
- வறட்சிக நலங்களில் 2-3 முறை பாசனம் கொடுக்கலாம் (வளர்ச்சிப்பருவம், பூக்கும் நேரத்தில் முக்கியம்)
- அதிக நீர் தேங்காதவாறு கவனிக்க வேண்டும்

**6. களை மற்றும் நோய் மேலாண்மை**

- களையினை கட்டுப்படுத்த 15-20 நாட்களிலும், 30-35 நாட்களிலும் கையினால்களை எடுக்கவும்
- **பூச்சிகள்**
  - தளிர் ஈ - தளிர் ஈக்களை கட்டுப்படுத்த இமிடாக்ளோபிரிட் 5g/kg விதை நேர்த்தி செய்து கட்டுப்படுத்தலாம்.
  - தண்டு துளைப்பான் - வேம்பு சார்ந்த மருந்துகளைக் கொண்டு கட்டுப்படுத்தலாம்.
- **நோய்கள்**
  - கருமை நோய்
  - கேப்டான் அல்லது கார்பன்டசிம் 2ஆ/கிலோ விதையுடன் சேர்த்து விதை நேர்த்தி செய்து கட்டுப்படுத்தலாம்.
- **இலை பழுப்பு நோய்**
  - மாங்கோசெப் 2g/லிட்டர் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**7. அறுவடை மற்றும் மகசூல்**

- வளர்ச்சி காலம் 70-90 நாட்கள்.
- **அறுவடை நேரம்**
  - 80-100 நாட்கள் கழித்து அறுவடை செய்யலாம்.
  - கதிர்நிறம் மஞ்சளாகி விதைகள் கடினமாகும் போது அறுவடை செய்ய வேண்டும்.
- **மகசூல்**
  - மானாவாரி : 1500-1800 கிலோ / ஹெக்டேர்
  - இறவை : 2500-2700 கிலோ / ஹெக்டேர்

**8. அறுவடை பின் நேர்த்தி**

- தானியம் பிரித்தல் (Threshing) கையால் அல்லது இயந்திரம் மூலம் செய்யலாம்.
- நன்றாக காயவைத்து ஈரப்பதம் 10-12% இருக்கும் வரை சேமிக்க வேண்டும்.
- வாழ்நாள் நீடிக்க உறுதியாக மூடப்பட்ட மொத்தக் கலங்களில் சேமிக்கலாம்.

தகவல் தொகுப்பு : **சு.வாசுகி, விதை ஆய்வு துணைஇயக்குநர், மதுரை, மொபைல் எண். : 80722 45412.**


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721